SG:DIGITAL





# நான் மின்னிலக்கமயமாகிறேன்!



## மூத்தோருக்கான மின்னிலக்கமயமாதல் திட்டத்தின் நடவடிக்கை தொகுப்பு 1

(தொடர்பு, மின்னிலக்க அரசாங்கச் சேவைகள், இணையப் பாதுகாப்பு)

எங்களது மின்னிலக்கத் தூதர்களின் உதவியுடன் மின்னிலக்கத் திறன்களைக் கற்றுக்கொண்டு, எங்கள் விளையாட்டு அட்டையுடன் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டறிந்திடுங்கள். இணையம்வழி விரிவாகக் கற்றுக்கொண்டு, பல்வேறு திட்டங்களில் பங்குபெறுங்கள்.

**WhatsApp • Telegram • Gov.SG • Wireless@SGx • Email • Zoom • Google Translate Google Maps • ComfortDelGro • Grab Transport • MyTransport.SG • TL SimplyGo EZ-Link • HealthHub • Singpass App • LifeSG App • NLB Mobile App • meWATCH • meLISTEN • Facebook • Instagram • TikTok • Staying Safe Online**

## மேல்விவரம் அறிந்திடுங்கள்

sdo.gov.sg

6377 3800

INFO@imda.gov.sg

மின்னிலக்கமயமாகி வெல்லுங்கள்!

# மின்னிலக்கத்துடன் இணைந்திட உங்களை வரவேற்கிறோம்.

இந்த அட்டைப்பலகை விளையாட்டைப் பூர்த்தி செய்து, மின்னிலக்க வாழ்க்கையைத் தொடங்கிவிடுங்கள்!

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், கவலை வேண்டாம்! தேர்ந்தெடுக்கப்பட்ட பொது நூலகங்களில் அல்லது சமூக மன்றங்களில் இருக்கும் எங்களது மின்னிலக்கத் தூதர்களை அணுகுங்கள். உங்களது கற்றல் பயணத்திற்கு அவர்கள் உதவி செய்வார்கள். எனவே, இந்த நடவடிக்கை தொகுப்பைக் கையோடு வைத்திருந்து, மின்னிலக்கப் பயணத்தை மகிழ்ச்சியாக மேற்கொள்ளுங்கள்!

**ஆரம்பி**
உங்கள் மின்னிலக்கப் பயணத்தை இங்கே தொடங்குங்கள்

**நிலை 1**

- வாசக அல்லது குரல்பதிவு தகவல்கள் அனுப்புங்கள்
- குரல் அல்லது காணொளி அழைப்புகள் செய்யுங்கள்
- உடனுக்குடன் தகவல் அறிய அரசாங்கத்தின் வாட்ஸ்ஆப் சேவைக்குப் பதிவு செய்யுங்கள்
- பகிரலைப் பகுதிகளில் கம்பியில்லா இணைய வசதியுடன் இணையுங்கள்
- காணொளி சந்திப்புடன் இணைய கற்றுக் கொள்ளுங்கள்
- SafeEntry நுழைவுப் பதிவுக்காக விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருட கற்றுக் கொள்ளுங்கள்
- மின்னஞ்சல் கணக்கை அமைக்க கற்றுக் கொள்ளுங்கள்

எங்களது அறிமுகக் காணொளியைக் காண இப்போதே விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்.

- ஃபிஷிங் தொடர்பான பாதுகாப்புக் குறிப்பைப் பகிருங்கள் (எ.கா. சரிபார்க்காத இணைப்புகளைத் திறக்காதீர்கள்)
- ஒரு நண்பரைப் பரிந்துரை செய்யுங்கள்

**நிலை 2**

- SafeEntry நுழைவுப்பதிவு செய்ய சிங்பாஸ் மொபைல் செயலியை அமைத்து புதுப்பதிவு செய்யுங்கள்
- TraceTogether பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்
- NLB Mobile செயலியை அமைத்திடுங்கள்
- LifeSG செயலியை அமைத்து புதுப்பதிவு செய்யுங்கள்
- வலுவான இணைய மறைச் சொற்களை அமைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்
- சிங்பாஸ் மொபைல் செயலிக்கு SMS 2FA (இரட்டை மறைச்சொல் உறுதிப்பாடு) பதிவு செய்ய கற்றுக் கொள்ளுங்கள்
- ஒரு நண்பரைப் பரிந்துரை செய்யுங்கள்

**நிலை 3**

- நீங்கள் விரும்பும் டிஜிபேங்க் செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்
- உங்களது PayNow சேவையை அமைத்திடுங்கள்
- நீங்கள் விரும்பும் மொபைல் கட்டணமுறை செயலியில் SGQR மூலம் பணம் செலுத்த கற்றுக் கொள்ளுங்கள்
- உங்களுக்குப் பிடித்த கற்றல் பயணத்திற்குப் பதிவு செய்யுங்கள்
- ஒரு நண்பரைப் பரிந்துரை செய்யுங்கள்

இந்த நடவடிக்கை தொகுப்பையும் பயன்பாட்டு வழிமுறைகளையும் மின்பதிப்பு வடிவில் பெறுவதற்கு விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்.

# SG Digital

## வாட்ஸ்ஆப் பயன்பாட்டு வழிமுறைகள்

### உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் வாட்ஸ்ஆப் பயன்படுத்தி வாசகத் தகவல்களையும் ஒலிப்பதிவு தகவல்களையும் அனுப்பலாம், தொலைபேசி அழைப்புகளும் காணொளி அழைப்புகளும் செய்யலாம், பயன்பாட்டாளர் இருக்குமிடத்தையும் ஊடகங்களையும் குடும்பத்தாரோடும் நண்பர்களோடும் பகிரலாம்!

## படிநிலை 1 வாட்ஸ்ஆப் செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவி, தொடர்புகளைச் சேருங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, வாட்ஸ்ஆப் செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.





ஐஓஎஸ் பயன்பாட்டாளர் | ஆண்ட்ராய்ட் பயன்பாட்டாளர்

1. அல்லது சின்னத்தின்மீது தட்டுங்கள்.

2. ஐஓஎஸ், ஆண்ட்ராய்ட் பயன்பாட்டாளர்கள் இருவரும், 'New Contact' மீது தட்டி புதிய தொடர்பைச் சேர்க்கலாம்.

## படிநிலை 2 விசைத்தட்டி வழியாகத் தகவல்கள் அனுப்புங்கள்





ஐஓஎஸ் பயன்பாட்டாளர் | ஆண்ட்ராய்ட் பயன்பாட்டாளர் | ஐஓஎஸ் பயன்பாட்டாளர் | ஆண்ட்ராய்ட் பயன்பாட்டாளர்

3. புதிய உரையாடலைத் தொடங்க, அல்லது சின்னத்தின்மீது தட்டுங்கள்.

4. நீங்கள் உரையாட விரும்பும் தொடர்பைத் தேர்ந்தெடுங்கள். விசைத்தட்டியைப் பயன்படுத்தி தகவல் எழுதிய பிறகு, சின்னத்தைத் தட்டி அனுப்புங்கள்.

## படிநிலை 3 வாட்ஸ்ஆப் தொலைபேசி அழைப்பு அல்லது காணொளி அழைப்பு செய்யுங்கள்




5. நீங்கள் உரையாட விரும்பும் தொடர்பைத் தேர்ந்தெடுங்கள்.

6. தொலைபேசி அழைப்பு செய்வதற்கு சின்னத்தைத் தட்டுங்கள்.

7. காணொளி அழைப்பு செய்வதற்கு சின்னத்தைத் தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- உங்களுக்குத் தெரியாதவர்கள் அனுப்பும் உரையாடல்களைத் தடை செய்யுங்கள்.
- தெரியாத மூலங்களிலிருந்து வந்த சரிபார்க்கப்படாத இணைப்புகளைத் திறக்காதீர்கள் அல்லது பதிவிறக்கம் செய்யாதீர்கள்.
- வாட்ஸ்ஆப்-பில் தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களை வெளியிடாதீர்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## Telegram தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?


பொதுக்குழுக்கள் என்பவற்றில் எவராலும் இணைந்து கொள்ள முடியும் மற்றும் அவை விவாதங்களுக்கும் தகவல்களைப் பரப்புவதற்கும் சக்தி வாய்ந்த மேடைகளாகும்!

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் டெலிகிராம் செயலியை நிறுவி தொடர்புகளைச் சேருங்கள்

**Apple App Store** அல்லது **Google Play Store** சென்று, **Telegram** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.





1. அந்த சின்னத்தின் மீது தட்டவும்.தட்டவும்.





2. ஒரு புதிய தொடர்பைச் சேர்ப்பதற்கு, '**புதிய தொடர்பு**' என்பதன் மீது தட்டவும்.


## படிநிலை 2 டெலிகிராம் செய்திகளை விசைப்பலகை மூலமாக அனுப்புங்கள். காணொளி/குரல் வழியாக அழைப்பு விடுங்கள்





3. ஒரு புதிய அரட்டையைத் (சேட்) தொடங்குவதற்கு, அந்த சேட் சின்னத்தின் மீது தட்டவும்.




4. நீங்கள் அரட்டை அடிக்க விரும்பும் தொடர்பாளரைத் தேர்வு செய்யுங்கள்.





5. உங்கள் செய்தியைத் தட்டச்சு செய்து அந்த செய்தியை அனுப்புவதற்கு, அம்புக்குறி சின்னத்தின் மீது தட்டவும்.




6. மேலும் நீங்கள் குரல் மற்றும் காணொளி செயல்பாடுகளை அணுகுவதற்கு, அந்த தொடர்பாளரின் பெயர் மீது தட்டவும் செய்யலாம்.


## படிநிலை 3 ஒரு டெலிகிராம் தடத்தில் சேருங்கள்




7. தேடல் பட்டி வழியாக ஒரு டெலிகிராம் தடத்தை தேடுங்கள்.




8. '**உணவு**' என்று தட்டச்சு செய்து நீங்கள் சேர விரும்பும் அந்த தடம் மீது தட்டவும்.




9. '**இணைந்திடுங்கள்**' மீது தட்டவும் அற்புதமான சலுகைகளுக்கு அந்த தடத்தை நீங்கள் பின்பற்ற இயலும்!

**பயனுள்ள தடங்கள்:**
@GovSG
@CNALATEST
@SGFOODDEALS
@SGCAREERS

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: CSA Singapore / GoSafeOnline)*

- வேண்டாத அரட்டைகளை உங்களுக்கு அனுப்புகின்ற நீங்கள் அறிந்திராத பயனாளர்களை தடை **செய்து விடுங்கள்**.
- அறியப்படாத இடங்களில் இருந்து வரும் உறுதிபடுத்தப்படாத சுட்டிகள் மற்றும் இணைப்புகள் எதையும் திறந்து விடாதீர்கள் அல்லது பதிவிறக்கம் **செய்து விடாதீர்கள்**.
- டெலிகிராமில் தனிப்பட்ட அல்லது நிதி சம்பந்தமான தகவல்களை **வெளியிடாதீர்கள்**.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## Gov.sg பயன்பாட்டு வழிமுறைகள்


### உங்களுக்குத் தெரியுமா?

சிங்கப்பூரின் கொவிட்-19 நிலவரம் பற்றிய அண்மைத் தகவல்களைப் பெற, உங்கள் கைப்பேசியில் Gov.sg அரசாங்க வாட்ஸ்ஆப் சேவைக்கு நீங்கள் பதிவு செய்யலாம். பொய்ச் செய்திகள் பற்றி “Factually” அளிக்கும் விளக்கங்களும் மற்ற முக்கியமாக அரசாங்க அறிவிப்புகளும்கூட உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## படிநிலை 1 — Gov.sg அரசாங்க வாட்ஸ்ஆப் சேவைக்கு go.gov.sg/whatsapp-ல் பதிவு செய்யுங்கள்

உங்கள் கைப்பேசியின் இணைய உலாவியை (எ.கா. ச.ஃபாரி, குரோம்) திறந்து, இணையத்தள முகவரியை உள்ளிடுங்கள்:
**go.gov.sg/whatsapp**

உங்கள் பெயர், கைப்பேசி எண், வயதுப்பிரிவு ஆகிய விவரங்களைப் பூர்த்தி செய்து, நீங்கள் விரும்பும் மொழியைக் குறிப்பிடுங்கள். (நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைத் தேர்ந்தெடுக்கலாம்)




1. இணையத்தளத்தின் அடிப்பகுதிக்குச் சென்று, ‘**Submit**’ மீது தட்டி, பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்.

## படிநிலை 2 — Gov.sg அரசாங்க வாட்ஸ்ஆப் சேவையுடன் உடனுக்குடன் தகவல் அறிந்திடுங்கள்


உங்கள் கைப்பேசியில் ஏற்கனவே வாட்ஸ்ஆப் செயலி இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

உங்கள் பதிவு நிறைவேறியவுடன், வாட்ஸ்ஆப்-பில் தகவல் பெறுவீர்கள்.




*மேற்காணும் படம் ஐபோன் திரையிலிருந்து எடுக்கப்பட்டது.*

## ருப்பத்திற்கு உட்பட்டது — Gov.sg இணையத்தளம், ஃபேஸ்புக், யூடியூப், இன்ஸ்டாகிராமில் உடனுக்குடன் தகவல் அறிந்திடுங்கள்




Gov.sg Factually: அரசாங்கக் கொள்கைகள் தொடர்பான பொய்ச் செய்திகள் பற்றிய அண்மை விளக்கங்களைப் படித்திடுங்கள்.



Gov.sg யூடியூப்: Gov.sg தொடரின் அண்மை வெளியீடுகள், அரசாங்கக் கொள்கைகள் பற்றிய விளக்கங்கள் மற்றும் இன்னும் பலவற்றைப் பெறுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- சரிபார்த்து உறுதி செய்யாத “செய்திகளை” குடும்பத்தாரிடமும் நண்பர்களிடமும் தெரிவிப்பதைத் தவிர்த்திடுங்கள்.
- தெரியாத மூலங்களிலிருந்து வந்த சரிபார்க்கப்படாத இணைப்புகளைத் திறக்காதீர்கள் அல்லது பதிவிறக்கம் செய்யாதீர்கள்.

SG:DIGITAL — INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

Wireless@SGx
பயன்பாட்டு
வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் Wireless@SGx பயன்படுத்தி நாடெங்கிலும் இலவசமாக இணையத்தைப் பயன்படுத்தலாம். சிங்கப்பூரின் ஆகப்பெரிய இலவச Wi-Fi கட்டமைப்பான இது, கம்பி இணைப்பில்லாத பாதுகாப்பான, தடங்கலற்ற இணைப்பையும் வரம்பற்ற டேட்டா பயன்பாட்டையும் வழங்குகிறது.


go.gov.sg/ConnectWSGx-ல் மேல்விவரம் அறியலாம்

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் Wireless@SGx செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, Wireless@SGx செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.





**1.** செயலியை உங்கள் கைப்பேசியில் செயற்படுத்த '**Let's Go**' மீது தட்டுங்கள்.




**2.** விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்த பிறகு, '**Accept & Continue**' மீது தட்டுங்கள்.


## படிநிலை 2A SIM அட்டை உள்ள கைப்பேசியில் Wireless@SGx இணைப்பை அமைத்திடுங்கள்








**ஐஓஎஸ் பயன்பாட்டாளர்கள்** தங்கள் சாதனத்தில் Wi-Fi அடையாளத்தை நிறுவ வழிகாட்டப்படுவார்கள். படிப்படியான வழிகாட்டலைப் பின்பற்றி, செயற்படுத்தலைப் பூர்த்தி செய்யுங்கள்.





**3.** செயலி நீங்கள் இருக்குமிடத்தை அணுகுவதற்கு அனுமதி கொடுங்கள்.


*மேற்காணும் படங்கள் ஐபோன் திரையிலிருந்து எடுக்கப்பட்டன.*

## படிநிலை 2B SIM அட்டை இல்லாமல் கைப்பேசியில் Wireless@SGx இணைப்பை அமைத்திடுங்கள்




**4.** செயலியில், "More" மற்றும் "Setup" தேர்ந்தெடுங்கள். ஏதாவதொரு சேவை நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து, உங்கள் பெயரையும் உள்ளூர் கைப்பேசி எண்ணையும் உள்ளிடுங்கள்.




**5.** குறுந்தகவல்வழி உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லை (OTP) உள்ளிட்டு, பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- பயன்படுத்திய பிறகு Wi-Fi இணைப்பிலிருந்து அல்லது கணக்கிலிருந்து வெளியாகிவிடுங்கள்.
- ஒவ்வோர் அங்கத்திற்குப் பிறகும் இணைய உலாவியின் பதுக்ககத்தையும் (cache) பயன்பாட்டுப் பதிவுகளையும் (internet history) அழித்துவிடுங்கள்.
- உண்மையானதுபோல பாசாங்கு செய்யும் "இலவச" Wi-Fi ஹாட்ஸ்பாட்-களிடம் கவனமாக இருங்கள். நீங்கள் Wireless@SGx இணைப்பை அமைத்த பிறகு, எந்தவொரு Wireless@SG கட்டமைப்புடனும் நீங்களாக இணைக்கக்கூடாது. அதற்குப் பதிலாக, உண்மையான Wireless@SGx கட்டமைப்புடன் சாதனம் தானாக இணைய அனுமதிக்கவேண்டும்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## மின்னஞ்சல் பயன்பாட்டு வழிமுறைகள்




## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் எங்கிருந்தும், எந்த நேரத்திலும் இணையம்வழி தகவல்கள் அனுப்பவும் பெறவும் மின்னஞ்சல் பயன்படுத்தலாம். மின்னஞ்சல் விரைவாகவும் செயலாற்றலோடும் தகவல் அனுப்ப துணை புரிகிறது. நீங்கள் சில நிமிடங்களில் தகவல் உருவாக்கி அனுப்பி வைக்கலாம். ஒரே சமயத்தில் பல பேருக்குத் தகவல் அனுப்பலாம்.

## படிநிலை 1 உங்கள் கைபேசியில் மின்னஞ்சல் செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, உங்களுக்குப் பிடித்த கைப்பேசி செயலிகளைப் பதிவிறக்குங்கள். எடுத்துக்காட்டுகள்:

**மின்னஞ்சல்**

- ஜீமெயில்
- அவுட்லுக்
- யாஹூ


## படிநிலை 2 மின்னஞ்சல் முகவரிக்குப் பதிவு செய்யுங்கள்





நீங்கள் மின்னஞ்சல் செயலியை நிறுவிய பிறகு, செயலியைச் செயற்படுத்தி பின்வருமாறு செய்யுங்கள்:

1. உங்கள் பெயர், பிறந்த தேதி போன்ற விவரங்களை நிரப்புங்கள்.
2. உங்களுக்குப் பிடித்த மின்னம்சல் முகவரியை உள்ளிட்டு, வலுவான மறைச்சொல்லை உருவாக்குங்கள்.
3. கூடுதல் சரிபார்ப்புக்காக, உங்கள் கைப்பேசி எண்ணை உள்ளிடுங்கள் (உங்கள் விருப்பத்திற்கு உட்பட்டது).
4. உங்கள் “inbox”-ல் வரவேற்பு மின்னஞ்சலைப் பெறுவீர்கள். அந்த மின்னஞ்சலைத் திறந்து, உங்கள் கணக்கை ஆராயத் தொடங்குங்கள்!

## படிநிலை 3 மின்னஞ்சல் எழுதி அனுப்புங்கள்



5. மின்னஞ்சல் எழுதுவதற்கு ‘+’ பொத்தானைத் தட்டுங்கள்.




6. மின்னஞ்சலைப் பெறுவோரின் மின்னஞ்சல் முகவரியை ‘To’ பகுதியில் நிரப்புங்கள்.

CC மற்றும் BCC தெரிவதற்கு கீழ்நோக்கிய அம்புக்குறியைத் தட்டுங்கள்.




7. நீங்கள் அனுப்ப விரும்பும் தகவலை எழுதி, மின்னஞ்சலைப் பெறுநர்களுக்கு அனுப்பி வைக்க சின்னத்தைத் தட்டவும்.

*குறிப்பு: வெவ்வேறு மின்னஞ்சல் கைப்பேசி செயலிகளில் வெவ்வேறு சின்னங்கள் இருக்கலாம்.*

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- எப்போதும் மின்னஞ்சலின் மூலத்தைச் சரிபாருங்கள். மின்னஞ்சலில் உள்ள சந்தேகத்திற்குரிய “லிங்க்” அல்லது இணைப்புகள் மீது க்ளிக் செய்யாதீர்கள்.
- தனிப்பட்ட அல்லது நிதி விவரங்களை மின்னஞ்சல்வழி தெரிவிக்காதீர்கள்.
- வசதி இருந்தால், கூடுதல் சரிபார்ப்புக்காக இரட்டை மறைச்சொல் முறையை (2FA) செயல்படுத்துங்கள்.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## ஸூம் (Zoom) பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் வீட்டில் சௌகரியமாக இருந்தபடியே, ஸூம் பயன்படுத்தி மெய்நிகர் சந்திப்புக்கு அல்லது இணைய அரங்குக்கு ஏற்பாடு செய்யலாம் அல்லது கலந்து கொள்ளலாம்!


## படிநிலை 1A உங்கள் கைப்பேசியில் ஸூம் செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, ஸூம் செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 1B கைப்பேசிவழி ஸூம் மெய்நிகர் சந்திப்பில் அல்லது இணைய அரங்கில் சேருங்கள்

மின்னஞ்சல் அல்லது உடனடித் தகவல் மூலமாக உங்களுக்கு அனுப்பப்பட்ட ஸூம் இணைப்பின்மீது கிளிக் செய்யுங்கள்.





1. உங்கள் பெயரை உள்ளிட்டு, ஒலியை இணைத்து, காணொளியைத் திறந்திடுங்கள். '**Join Meeting**' மீது தட்டுங்கள்.




2. சந்திப்பின் மறைச்சொல்லை உள்ளிட்டு, '**Continue**' மீது தட்டுங்கள்.





3. உங்கள் கேமராவை ஸூம் பயன்படுத்த அனுமதியளிக்க 'Ok' மீது தட்டுங்கள். '**Join with video**' தேர்ந்தெடுங்கள்.





4. உங்கள் ஒலிபெருக்கியை ஸூம் பயன்படுத்த அனுமதியளிக்க '**Ok**' மீது தட்டுங்கள்.

## படிநிலை 2 கணினிவழி ஸூம் மெய்நிகர் சந்திப்பில் அல்லது இணைய அரங்கில் சேருங்கள்

மின்னஞ்சல் அல்லது உடனடித் தகவல் மூலமாக உங்களுக்கு அனுப்பப்பட்ட ஸூம் இணைப்பின்மீது கிளிக் செய்யுங்கள்.




5. '**Click here**' மீது கிளிக் செய்து, '**Join from your browser**' தேர்ந்தெடுங்கள்.




6. சந்திப்பின் மறைச்சொல்லையும் உங்கள் பெயரையும் உள்ளிடுங்கள். '**Join**' மீது கிளிக் செய்யுங்கள்.




7. இணைய அரங்கை நடத்துபவர் உங்களுக்கு நுழைவு அனுமதி அளிப்பதற்காகக் காத்திருங்கள்.

*நீங்கள் ஸூம் மெய்நிகர் சந்திப்பில் அல்லது இணைய அரங்கில் சேர்வதற்கு ஸூம் கணக்குக்குப் பதிவு செய்ய வேண்டியதில்லை.*
*நீங்கள் மெய்நிகர் சந்திப்புக்கு அல்லது இணைய அரங்குக்கு ஏற்பாடு செய்ய விரும்பினால், ஸூம் கணக்கு வைத்திருக்க வேண்டும்.*

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- தனிப்பட்ட விவரங்களை இணையத்தில் வெளியிடாதீர்கள்.
- ஸூம் மெய்நிகர் சந்திப்பின் / இணைய அரங்கின் இணைப்புகளையும் மறைச்சொற்களையும் சந்திப்புக்கு அழைக்கப்படாத ஒருவருடன் பகிராதீர்கள்.
- முக்கியமான கோப்புகளைப் பகிராதீர்கள் அல்லது முக்கியமான கலந்துரையாடல்களை நடத்தாதீர்கள்.
- உரையாடல் இயக்கத்திலுள்ள தெரியாத மூலங்களின் சரிபார்க்காத இணைப்புகளைத் திறக்காதீர்கள் அல்லது பதிவிறக்கம் செய்யாதீர்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## கூகல் Translate பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் இணையத்தொடர்பு இல்லாமலேயே மொழிகளை மொழிபெயர்க்கலாம். நீங்கள் "**translate offline**" என்பதைப் பார்க்கும்போது அதில் குறியிட்டால் போதும்.

### படிநிலை 1 — கூகல் Translate செயலியை உங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்யுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **கூகல் Translate செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.

### படிநிலை 2A எழுதும் அல்லது தட்டச்சு செய்யும் இயக்கத்தைப் பயன்படுத்துங்கள்



3. மொழிபெயர்க்க விரும்பும் மொழியையும் மொழிபெயர்க்கப்படும் மொழியையும் தேர்ந்தெடுங்கள். பிறகு "**Finish**" மீது தட்டுங்கள்.



4. நீங்கள் சொல்ல விரும்பும் சொற்றொடரை அல்லது வார்த்தைகளை உள்ளிடுங்கள் அல்லது எழுதும் இயக்கத்தைப் பயன்படுத்த Handwriting மீது தட்டுங்கள்.





5. கையால் எழுதும் இயக்கத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால், திரையின் கீழ் பாதியில் காலியாக இருக்கும் கட்டத்திற்குள் நீங்கள் மொழிபெயர்க்க விரும்பும் சொல்லை எழுதுங்கள்.




6. சொற்றொடர் தானாக மொழிபெயர்க்கப்படும். எ.கா. "hello" எனத் தட்டச்சு செய்து, தொடர்வதற்கு "你好" மீது தட்டுங்கள்.

### படிநிலை 2B கேமரா இயக்கத்தைப் பயன்படுத்தும் வழிமுறை



7. நீங்கள் Camera மீது தட்டி, கேமரா இயக்கத்தைப் பயன்படுத்த அனுமதி அளிக்கலாம்.




8. கேமரா இயக்கத்தைப் பயன்படுத்தும்போது, வழக்கமாக "**Instant**" அம்சத்துடன் தொடங்குவீர்கள். உங்கள் கைப்பேசியின் கேமராவை வாசகத்தின்மீது காட்டி உடனடியாக மொழிபெயர்க்கலாம்.




9. இறக்குமதி இயக்கத்தைப் பயன்படுத்த Import மீது தட்டுங்கள். இதைப் பயன்படுத்தி, உங்கள் கைப்பேசியில் உள்ள படங்களைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்க்கலாம்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

!

- உங்கள் சாதனங்களையும் செயலிகளையும் எப்போதும் **புதுப்பித்து**, அறியப்பட்ட பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து அவற்றைப் பாதுகாத்திடுங்கள்.
- நீங்கள் பாதுகாக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்படாத இணையக் கட்டமைப்பைப் பயன்படுத்தினாலும், தனிப்பட்ட விவரங்கள் அல்லது வேறு முக்கிய தகவல்கள் கொண்ட அதிமுக்கிய உள்ளடக்கங்களை மொழிபெயர்ப்பதற்கு கூகல் **Translate** செயலியை **ஒருபோதும்** பயன்படுத்தக்கூடாது. வாசகத்தை செயலியில் உள்ளிட்டவுடன், அது கூகலின் உடைமையாகிவிடும், கூகல் தன் விருப்பப்படி வாசகத்திலுள்ள விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# SG Digital

## கூகல் வரைபட பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


நீங்கள் இணையம் இல்லாமலேயே பயணப் பாதைகளைத் தேடுவதற்கு வரைபடத்தைப் பதிவிறக்கம் செய்ய முடியும்.

### படிநிலை 1 கூகல் வரைபடச் செயலியை உங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்யுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **கூகல் வரைபடச் செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


### படிநிலை 2 உங்கள் பயணத்தைத் திட்டமிட, செயலியைச் செயல்படுத்துங்கள்




3. நீங்கள் செல்லவேண்டிய இடத்தைத் தேடுங்கள்.





4. சரியான இடத்தைத் தேர்ந்தெடுங்கள்.





5. "Directions" மீது தட்டுங்கள்.


### படிநிலை 3 நீங்கள் செல்லவேண்டிய இடத்தை அடைவதற்கான ஆக வேகமான பாதையைக் கண்டுபிடிக்க "Directions" மீது தட்டுங்கள்!




6. பயணத்தைத் தொடங்கும் இடத்தைத் தெரிவித்து, வெவ்வேறு போக்குவரத்து முறைகளைத் தேர்ந்தெடுங்கள்.




7. பரிந்துரைக்கப்படும் பயணப்பாதைகள் மீது தட்டும்போது இதனைக் காண்பீர்கள்.




8. நீங்கள் புறப்பட அல்லது சென்றடைய விரும்பும் நேரத்தையும் நீங்கள் நிர்ணயிக்கலாம்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- உங்கள் **சாதனங்களையும்** செயலிகளையும் எப்போதும் **புதுப்பித்து**, அறியப்பட்ட பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து பாதுகாத்திடுங்கள்.
- இடத்தகவல் சேவை அம்சத்தை அணுக, குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி அளித்திடுங்கள். உங்கள் **நம்பிக்கைக்குரியவர்களுடன்** மட்டுமே இடத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் இருக்கும் இடத்தை செயலி உங்கள் சார்பில் பகிர்ந்துகொள்ள அனுமதிக்கும் இயக்கத்தை முடக்கி வைத்திருங்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## ComfortDelGro பயன்பாட்டு வழிமுறைகள்

### உங்களுக்குத் தெரியுமா?


ComfortDelGro டாக்சி பதிவுச் செயலியில் ரொக்கமில்லாத பல்வேறு கட்டணமுறைகள் உள்ளன - CabCharge, கடன் அட்டை, NETS மற்றும் Paylah.

## படிநிலை 1 ComfortDelGro செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **ComfortDelGro செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


## படிநிலை 2 ComfortDelGro சேவைக்குப் பதிவு செய்யுங்கள்





3. உங்கள் கைப்பேசி எண்ணை உள்ளிடுங்கள்.




4. உங்கள் கைப்பேசிக்கு அனுப்பி வைக்கப்பட்ட OTP மறை எண்ணை உள்ளிடுங்கள்.





5. உங்கள் மின்னஞ்சலை சேர்த்து, உறுதிப்படுத்த "verify" மீது தட்டுங்கள்.





6. உறுதி செய்வதற்காக, உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட OTP மறை எண்ணை உள்ளிடுங்கள்.


## படிநிலை 3 செயலியின் வாயிலாகப் பயணத்தைப் பதிவு செய்யுங்கள்





7. நீங்கள் செல்ல விரும்பும் இடத்தை இங்கே நிரப்புங்கள்.





8. நீங்கள் மீட்டர் கட்டணத்தை அல்லது நிலைக் கட்டணத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.




9. பயணத்தின்போது பணம் செலுத்த 'Pay Onboard' மீது தட்டுங்கள், அல்லது ரொக்கமில்லாமல் பணம் செலுத்த உங்கள் அட்டையை இணைத்திடுங்கள்.




10. உங்களது அட்டைகளை இணைக்க '+ Add Payment Mode' மீது தட்டுங்கள். உள்ளிடுங்கள்.




11. பயணத்தைப் பதிவு செய்ய 'Book Now' மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

!

- ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல், கடவுச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்கள் எதனையும் எவரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- மூன்றாம் தரப்பு இணையத்தளங்களிடம் அல்லது ComfortDelGro என்று சொல்லிக்கொள்ளும் செயலிகளிடம் தனிப்பட்ட விவரங்கள் எதனையும் கொடுக்காதீர்கள்.
- இடத்தகவல் சேவை அம்சத்தை அணுக, குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி அளித்திடுங்கள். உங்கள் **நம்பிக்கைக்குரியவர்களுடன்** மட்டுமே இடத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.


SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## Grab Transport பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


Grab பலவகையான பயணத் தெரிவுகளைப் பயணிகளுக்கு வழங்குகிறது. சிறு பிள்ளைகளுக்கு உகந்த வாகனங்கள், சக்கர நாற்காலிகளை ஏற்றக்கூடிய வாகனங்கள், செல்லப்பிராணிகளுக்கு உகந்த வாகனங்கள் என பல உள்ளன.

## படிநிலை 1 Grab செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **Grab செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


## படிநிலை 2 Grab சேவைக்குப் பதிவு செய்யுங்கள்





3. '**New to Grab? Sign up!**' மீது தட்டி, ஒரு கணக்கை உருவாக்குங்கள்.




4. உங்கள் கைப்பேசி எண்ணை நிரப்புங்கள். உங்கள் கணக்கைச் செயல்படுத்த, கைப்பேசி எண்ணுக்கு 6-இலக்கக் குறியீடு அனுப்பி வைக்கப்படும்.





5. உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 6-இலக்கக் குறியீட்டை நிரப்புங்கள்.





6. பயணப்பதிவு செய்வதைத் தொடங்க '**Transport**' மீது தட்டுங்கள்.


## படிநிலை 3 Grab செயலி வாயிலாகப் பயணப்பதிவு செய்யுங்கள்





7. நீங்கள் செல்ல வேண்டிய இடத்தைக் கட்டத்தில் நிரப்புங்கள். நீங்கள் இறங்க விரும்பும் இடத்தைத் தேர்ந்தெடுங்கள்.





8. உங்களை ஏற்றிக்கொள்ள வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, '**Confirm Pick-Up**' மீது தட்டுங்கள்.




9. '**View All**' மீது தட்டி, நீங்கள் விரும்பும் பயணத்தைத் தேர்ந்தெடுங்கள். அனைத்து தெரிவுகளுக்கும் கட்டணமும் உத்தேசப் பயண நேரமும் காட்டப்படும்.




10. நீங்கள் விரும்பும் கட்டணமுறையைத் தேர்ந்தெடுங்கள் - ரொக்கம், ரொக்கக்கழிவு அட்டை அல்லது GrabPay.




11. நீங்கள் விரும்பும் பயணத்தையும் கட்டணமுறையையும் தேர்ந்தெடுத்தவுடன், '**Book**' மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- கட்டணங்களை மேலும் பாதுகாப்பான முறையில் செலுத்த, 6-இலக்க GrabPay மறை எண்ணை அமைத்திடுங்கள்.
- ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல், கடவுச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்கள் எதனையும் எவரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- மூன்றாம் தரப்பு இணையத்தளங்களிடம் அல்லது Grab என்று சொல்லிக்கொள்ளும் செயலிகளிடம் தனிப்பட்ட விவரங்கள் எதனையும் கொடுக்காதீர்கள். சரிபார்க்கும் நோக்கத்திற்குத் தேவைப்படும் விவரங்கள் அனைத்தும் Grab செயலியிலேயே கோரப்படும்.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## MyTransport.SG பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


MyTransport.SG செயலி வழங்கும் நிகழ்நேரத் தகவலையும் தனிப்பயனாக்கப்பட்ட விழிப்பூட்டிகளையும் பயன்படுத்தி உங்கள் பயணங்களைச் சிரமமின்றி திட்டமிடுங்கள்!


## படிநிலை 1 MyTransport.SG செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **MyTransport.SG செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.


1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.

## படிநிலை 2 உங்கள் பயணத்தைத் திட்டமிட முகவரி, பேருந்து நிறுத்தம் அல்லது பேருந்து சேவை எண்ணை உள்ளிடுங்கள்




OR






OR






3. தேடல் கட்டத்தைத் தட்டுங்கள்.
4. நீங்கள் செல்லவிருக்கும் **முகவரியை** உள்ளிட்டு, பரிந்துரைக்கப்படும் பட்டியலிலிருந்து சரியான முகவரியைத் தேர்ந்தெடுங்கள்.
5. **பேருந்து நிறுத்தத்தின் எண்ணை** உள்ளிட்டு, பரிந்துரைக்கப்படும் பட்டியலிலிருந்து சரியான பேருந்து நிறுத்தத்தைத் தேர்ந்தெடுங்கள்.
6. **பேருந்து சேவை எண்ணை** உள்ளிட்டு, பரிந்துரைக்கப்படும் பட்டியலிலிருந்து சரியான பேருந்து சேவையைத் தேர்ந்தெடுங்கள்.

## படிநிலை 3 நீங்கள் விரும்பும் பயணத் தெரிவுகளைத் தேர்ந்தெடுங்கள்






7a. **பொதுப் போக்குவரத்துக்கு,** நீங்கள் விரும்பும் பயண முறையைத் தேர்ந்தெடுங்கள் (பேருந்து மட்டும், பெருவிரைவு ரயில் மட்டும், அல்லது இரண்டும்).

7b. நீங்கள் விரும்பும் தெரிவின்மீது தட்டி, பயணப் பாதையை வரைபடத்தில் பாருங்கள்.

7c. பட்டை மீது தட்டி, அழுத்திக்கொண்டே, பயண விவரங்களைப் பார்வையிட மேலாகத் தள்ளிவிடுங்கள்.

8. **வாகனம் ஓட்டிச்செல்ல,** கார் சின்னத்தைத் தட்டுங்கள். சாத்தியமான வெவ்வேறு பயணப் பாதைகளைப் பார்வையிட, திரையின் அடியிலிருந்து வலதுபக்கமாகத் தள்ளிவிடுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- **உங்கள் சாதனங்களையும்** செயலிகளையும் எப்போதும் **புதுப்பித்து,** அறியப்பட்ட பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து பாதுகாத்திடுங்கள்.
- இடத்தகவல் சேவை அம்சத்தை அணுக, குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி அளித்திடுங்கள். உங்கள் **நம்பிக்கைக்குரியவர்களுடன்** மட்டுமே இடத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் இருக்கும் இடத்தை செயலி உங்கள் சார்பில் பகிர்ந்துகொள்ள அனுமதிக்கும் இயக்கத்தை முடக்கி வைத்திருங்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## TL SimplyGo பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

TL SimplyGo செயலியுடன், உங்களது பொதுப் போக்குவரத்து கட்டணப் பரிவர்த்தனைகளைத் தடையின்றி கண்காணிக்கலாம். அதோடு, பேருந்து வந்தடையும் நிகழ்நேர விவரத்தையும் செயலி வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்!

## படிநிலை 1 TL SimplyGo செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **TL SimplyGo செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


## படிநிலை 2 TL SimplyGo சேவைக்குப் பதிவு செய்யுங்கள்





3. பக்கத்தின் அடியில் காணப்படும் '**Create Account**' மீது தட்டுங்கள்.




4. உங்களது **மின்னஞ்சல் முகவரி, கடவுச்சொல், பெயர், கைப்பேசி எண்** ஆகியவற்றை உள்ளிடுங்கள்.





5. விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள, முதல் பெட்டியில் குறியிட்டு, '**Register**' மீது தட்டுங்கள்.





6. உங்கள் கைப்பேசி எண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்ட **OTP** மறை எண்ணை உள்ளிட்டு, '**Submit**' மீது தட்டுங்கள்.


## படிநிலை 3 TL SimplyGo செயலியில் உங்கள் அட்டையை இணைத்திடுங்கள்




7. முகப்புப் பக்கத்தில், '**Add Card**' மீது தட்டுங்கள்.





8. நீங்கள் சேர்க்க விரும்பும் அட்டையின் வகையைத் தேர்ந்தெடுக்க, கீழ்நோக்கிய அம்புக்குறியைத் தட்டுங்கள்.




9. இந்த அட்டைக்கு ஒரு பெயரும் CAN ID அடையாள எண்ணும் உள்ளிடுங்கள்.

*CEPAS அட்டையின் பின்பக்கத்தில் CAN ID-ஐ காணலாம்.




10. அட்டையின் இணைப்பைப் பூர்த்தி செய்ய '**Submit**' மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- செயலிகளை அதிகாரத்துவ மூலங்களிலிருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்யுங்கள்.
- பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, மறக்காமல் மென்பொருளை அடிக்கடி புதுப்பித்திடுங்கள்.
- உங்களது ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல், மறைச்சொல் அல்லது மற்ற தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.


SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## EZ-Link பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் ஈசி-லிங்க் செயலியைப் பயன்படுத்தி உங்கள் வீட்டில் இருந்தபடியே பயண அட்டையில் பணம் நிரப்பலாம், பரிவர்த்தனைகளையும் அட்டைகளின் இருப்புத்தொகையையும் சரிபார்க்கலாம். மேலும் அறிய, இன்றே செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்!

## படிநிலை 1 EZ-Link செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, EZ-Link **செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


## படிநிலை 2 செயலியைத் திறந்து, ஒரு கணக்கைப் பதிவு செய்யுங்கள்





3. செயலியைத் திறந்து, "Register" மீது தட்டி ஒரு கணக்கை அமைத்திடுங்கள்.




4. உங்கள் **பெயர், மின்னஞ்சல்,** தற்போதைய **கைப்பேசி எண் ஆகியவற்றை நிரப்புங்கள்.** விதிகளும் நிபந்தனைகளும் கட்டத்தில் **குறியிடுங்கள்.** "Next" மீது தட்டுங்கள்.





5. உங்கள் கைப்பேசிக்கு அனுப்பி வைக்கப்பட்ட OTP மறை எண்ணை உள்ளிடுங்கள்.





6. **புதிய கடவுச்சொல்லை** உருவாக்கி, **"Repeat New Password"** பகுதியின்கீழ் மறுபடியும் உள்ளிடுங்கள். பிறகு "**Next**" மீது தட்டி போதும்!


## படிநிலை 3 NFC செயலியக்கமுள்ள சாதனங்களுக்கு விரைவான பணம் நிரப்பல்





7. விரைவான பணம் நிரப்பல் தெரிவைத் தேர்ந்தெடுத்து, CAN ID எண்ணை அழுத்துங்கள்.





8. அட்டை விவரப் பக்கத்தில் பணம் நிரப்பல் தெரிவைத் தேர்ந்தெடுக்கும்.




9. Auto Top-Up-கான தொகையைத் தேர்ந்தெடுக்கும்.




10. சாதனத்தின் NFC அமைவிடத்துடன் அட்டையை இணைக்கும்.




11. பணம் நிரப்பல் சேர்க்கப்பட்ட இருப்புத்தொகை.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- செயலிகளை அதிகாரத்துவ மூலங்களிலிருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்யுங்கள்.
- பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, மறக்காமல் மென்பொருளை அடிக்கடி புதுப்பித்திடுங்கள்.
- உங்களது ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல், மறைச்சொல் அல்லது மற்ற தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.

# SG Digital

## HealthHub செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


HealthHub செயலியுடன், உங்களது முன்பதிவுகளைக் கண்காணித்து நிர்வகிக்கலாம், பொது மருத்துவமனையில் / சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்த விவரங்களைப் பார்வையிடலாம், மற்ற சுகாதாரச் சேவைகளையும் ஒரே செயலியில் பெறலாம்.

## படிநிலை 1 HealthHub செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **HealthHub செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


## படிநிலை 2 சிங்பாஸ் பயன்படுத்தி HealthHub செயலியில் உட்பதிவு செய்யுங்கள்




3. பட்டியலிலிருந்து '**My Health Booklet**' தேர்ந்தெடுங்கள்.





4. சிங்பாஸ் பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் உட்பதிவு செய்யுங்கள்.





5. நீங்கள் அணுக விரும்பும் மின்-சேவையைத் தேர்ந்தெடுங்கள்.


## படிநிலை 3 உங்கள் உடல்நலனை எந்நேரத்திலும், எங்கிலிருந்தும் நிர்வகித்திடுங்கள்!




6. மருத்துவச் சந்திப்புகளுக்கான உங்களது முன்பதிவுகளைக் கண்காணித்து நிர்வகித்திடுங்கள்.




7. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகளைப் பார்வையிட்டு, நீங்கள் உட்கொள்ளும் / உட்கொண்ட மருந்துகளைக் கண்காணித்திடுங்கள்.




8. அண்மையில் செய்த பரிசோதனையின் முடிவுகளைப் பார்வையிடுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- உங்களது சிங்பாஸ் உட்பதிவு விவரங்களை மற்றவர்களிடம் **தெரிவிக்காதீர்கள்**. ஏனெனில், உங்கள் கணக்குகளும் தனிப்பட்ட விவரங்களும் அனுமதியின்றி அணுகப்படலாம்.
- செயலிகளை அதிகாரபூர்வ மூலங்களிலிருந்து மட்டுமே **பதிவிறக்கம் செய்யுங்கள்**.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

Singpass செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

singpass

## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது நம்பகமான மின்னிலக்க அடையாளமான சிங்பாஸ் செயலியுடன், இணையத்திலும் நேரிலும் சேவைகளை நாடும்போது உங்கள் அடையாளத்தை நீங்கள் எளிதில் நிரூபிக்கலாம். அதோடு, முக்கிய தகவல்களையும் கையோடு வைத்திருக்கலாம்.

## படிநிலை 1 உங்கள் திறன்பேசியில் Singpass செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்


**Apple App Store**, **Google Play Store** அல்லது **HUAWEI AppGallery**-க்குச் சென்று, Singpass மொபைல் செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள். அந்தச் செயலி அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பால் உருவாக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. IOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்கம் செய்ய **"Get"** மீது தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க **"Install"** என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 ஒருமுறை விவரங்களைப் பதிவு செய்திடுங்கள்

பதிவு செய்வதற்கு, உங்களுக்குத் தேவை:


1. இணைய இணைப்பு
2. Singpass அடையாளப் பெயரும் மறைச்சொல்லும்
3. பொருந்துமாயின், உங்களது தற்போதைய 2FA இரட்டை மறைச்சொல் (குறுந்தகவல் ஒரு முறை மறைச்சொல்).




**3.** உங்களது நம்பகத்தன்மை சான்றிதழில் **உங்கள் விவரங்களைச் சரிபாருங்கள்.**




**4.** **மறைச்சொல்லை அமைத்திடுங்கள்** மற்றும் / அல்லது கைரேகை / முக அடையாளத்தை நிறுவுங்கள்.





**5.** சேவைகளை அணுகும் வழிமுறையைப் படித்து தெரிந்துகொள்ளுங்கள்.

## படிநிலை 3 சிங்பாஸ் செயலியைப் பயன்படுத்தி சேவைகளை நாடுங்கள்

<u>உட்பதிவு குறுக்குவழி இணைப்புகளைப் பயன்படுத்தி மின்னிலக்கச் சேவைகளில் உட்பதிவு செய்யுங்கள்</u>





**6.** சிங்பாஸ் செயலியைத் திறந்த பிறகு **கீழே உள்ள உட்பதிவு குறுக்குவழி இணைப்புகளுக்குச் செல்லுங்கள்.**




**7.** நீங்கள் நாட விரும்பும் **மின்னிலக்கச் சேவைமீது தட்டுங்கள்.**

*குறுக்குவழி இணைப்புகளின் முழுப் பட்டியலைக் காண "குறுக்குவழி இணைப்புகள் அனைத்தையும் பார்" என்பதன்மீது தட்டுங்கள்*

*உங்கள் வசதிக்காக நீங்கள் கடைசியாகப் பயன்படுத்திய குறுக்குவழி இணைப்புகள் காட்டப்படும்!*





**8.** கைரேகை, முக அடையாளம் அல்லது மறைச்சொல் **பயன்படுத்தி உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துங்கள்.**




**9.** **உங்கள் கைப்பேசி உலாவியில் சேவைக்கு உட்பதிவு செய்து விட்டீர்கள்!** பரிவர்த்தனை முடிந்தவுடன் மறக்காமல் மின்னிலக்கச் சேவையிலிருந்து வெளியேறிவிடுங்கள்.

<u>முகப்புகளில் உங்கள் அடையாளத்தை நிரூபித்திடுங்கள்</u>




நேரில் சேவை பெறும்போது அரசாங்க முகப்புகளில் சிங்பாஸ் செயலியில் உள்ள **உங்களது மின்னிலக்க அடையாள அட்டையைக் காட்டுங்கள்.**

*உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் **+65 6335 3533** என்ற எண்ணில் சிங்பாஸ் உதவிச் சேவையை அழையுங்கள்*

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- உங்களது உட்பதிவு விவரங்களை யாரிடமும் சொல்லாதீர்கள். ஏனெனில், உங்கள் கணக்குகளும் தனிப்பட்ட விவரங்களும் அனுமதியின்றி அணுகப்படலாம்.
- உங்கள் திறன்பேசியில் உங்களது சொந்த கைரேகையையும் முக அடையாளத்தையும் மட்டுமே பதிவு செய்யுங்கள்.
- உங்கள் பரிவர்த்தனையைச் செய்து முடித்தவுடன் மின்சேவையிலிருந்து எப்போதும் வெளியேறிவிடுங்கள்.

SG :DIGITAL    INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## LifeSG செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


LifeSG செயலியுடன், உங்களுக்குப் பொருந்தும் அரசாங்க அனுகூலங்களை நீங்கள் கண்டறியலாம், உங்களுக்கு அருகில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடவடிக்கைகளையும் தேடலாம், ஆக அதிகமாகப் பயன்படுத்தப்படும் அரசாங்கச் சேவைகள் அனைத்தையும் ஒரே செயலியில் பயன்படுத்தலாம்.


## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் LifeSG செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **LifeSG** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 சிங்பாஸுடன் LifeSG செயலிக்குள் புகுபதிவு செய்யுங்கள்













3. LifeSG செயலியைச் செயற்படுத்தி, திரையில் காட்டப்படும் வழிகாட்டிகளைப் பின்பற்றுங்கள்.
4. உங்களது சிங்பாஸை பயன்படுத்தி புகுபதிவு செய்து, உங்களுக்குப் பயன்படக்கூடிய தகவலையும் சேவைகளையும் பார்வையிடுங்கள்!
5. நீங்கள் விரும்பும் மொழியைத் தேர்ந்தெடுத்து, LifeSG செயலியைப் பயன்படுத்தத் தொடங்குங்கள்!

குறிப்பு: உங்களது சிங்பாஸ் அடையாளம் உங்களது தனிப்பட்ட அடையாளமாகும். செயலி உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்கவும், உங்களது தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் இது வழிகோலும்.

## படிநிலை 3 LifeSG செயலியின் 3 முக்கிய அம்சங்களைப் பயன்படுத்துங்கள்




6. :உங்களது மெர்டேக்கா தலைமுறை மின்-அட்டையைப் பயன்படுத்தி, உங்களுக்கான தள்ளுபடிகளையும் அனுகூலங்களையும் பார்வையிடுங்கள்.
7. நீங்கள் தகுதி பெறும் அண்மை அரசாங்கத் திட்டங்களையும் அனுகூலங்களையும் பற்றி தகவல் பெறுங்கள்.
8. உங்களுக்கு அருகில் நடைபெறும் துடிப்பான முதுமைக்கால நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு, பதிவு செய்யுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது சிங்பாஸ் புகுபதிவு விவரங்களை மற்றவர்களிடம் தெரிவிக்காதீர்கள். ஏனெனில், உங்களது கணக்குகளும் தனிப்பட்ட விவரங்களும் அனுமதியின்றி பயன்படுத்தப்படலாம்.
- அதிகாரத்துவ மூலங்களிலிருந்து மட்டுமே செயலிகளைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## NLB Mobile பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

NLB Mobile செயலி உங்களது தனிப்பட்ட மின்னிலக்க நூலகமாகும். இந்தச் செயலியுடன் நீங்கள் மின்புத்தகங்கள், மின்சஞ்சிகைகள், மின்செய்தித்தாட்கள், மின்கற்றல் வளங்கள் ஆகியவற்றை எளிதில் பயன்படுத்தலாம். அதோடு, உங்கள் கணக்கையும் நீங்கள் சரிபார்க்கலாம் அல்லது இரவல் பொருட்களின் பட்டை குறியீடுகளை உங்கள் கைப்பேசியுடன் ஒளிவருடல் செய்து இரவல் பெறலாம்!


## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் NLB Mobile செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **NLB Mobile** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.


1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 myLibrary ID* பயன்படுத்தி பதிவு செய்யுங்கள்


*myLibrary ID என்பது NLB பயன்பாட்டாளர் பெயராகும். இதனைப் பயன்படுத்தி மின்னிலக்க நூலகச் சேவைகள் அனைத்தையும் நீங்கள் அணுகலாம். இது உங்களது அடையாள அட்டை அல்ல.
myLibrary ID பற்றி கேள்விகள் இருக்கிறதா? இந்த இணையத்தளத்தை நாடுங்கள்: go.gov.sg/mylibrary.



3. உங்களது myLibrary ID (இடைவெளி **இல்லாமல்**) மற்றும் மறைச்சொல்லை உள்ளிடுங்கள். உங்களிடம் myLibrary ID இல்லாவிட்டால் அல்லது இருக்கிறதா என உறுதியாகத் தெரியாவிட்டால், "**Register Here**" மீது தட்டுங்கள்.



4. உங்களது myLibrary ID மற்றும் மறைச்சொல்லை மீட்க அல்லது உருவாக்க, உங்களது அடையாள அட்டை எண்ணை **அல்லது** சிங்பாஸை பயன்படுத்துங்கள்.




5. செயலியை நீங்கள் முதல்முறையாகத் தொடங்கும்போது, உங்களுக்கு ஒரு பெயரைக் குறிப்பிட வேண்டும். நீங்கள் உண்மையான பெயரை அல்லது புனைப்பெயரைப் பயன்படுத்தலாம்.




6. செயலியை நீங்கள் முதல்முறையாகப் பயன்படுத்தும்போது, நீங்கள் வருகையளிக்க விரும்பும் 3 நூலகங்கள் வரை தேர்ந்தெடுக்கலாம்.


## படிநிலை 3 மின்புத்தகக்களைத் தேடிப்பார்த்து இரவல் பெறுங்கள், இலவச உள்ளூர் மின்செய்தித்தாட்களை வாசியுங்கள்!




7. மின்புத்தகங்களைத் தேடிப்பார்க்க, நீங்கள் '**eBooks**' பகுதியைப் பார்க்கலாம். மின்செய்தித்தாட்களை வாசிக்க, '**SPH Newspapers**' சின்னத்தின்மீது தட்டுங்கள்.



8. எஸ்பிஹெச் செய்தித்தாட்கள் பக்கத்தில் '**Proceed**' மீது தட்டுங்கள்.



9. நீங்கள் வாசிக்க விரும்பும் உள்ளூர் எஸ்பிஹெச் செய்தித்தாள் சின்னத்தின்மீது தட்டுங்கள்.

10. NLB Mobile செயலியைப் பயன்படுத்த படிப்படியாக வழிகாட்டும் காணொளிகளைக் காண, இந்த QR குறியீட்டை வருடுங்கள் அல்லது go.gov.sg/nlb-video-guides இணையப்பக்கத்திற்குச் செல்லுங்கள்!

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- செயலிகளை அதிகாரத்துவ மூலங்களிலிருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்யுங்கள்.
- பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, மறக்காமல் மென்பொருளை அடிக்கடி புதுப்பித்திடுங்கள்.
- முக்கியமான கோப்புகளைப் பகிராதீர்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## meWATCH தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் எங்கேயும், எப்போதும் இலவசமாகப் பொழுதுபோக்கை அனுபவிக்கலாம்! உங்களுக்குப் பிடித்த மீடியாகார்ப் நாடகங்கள் மற்றும் பொழுதுபோக்குத் தொடர்களை அனைத்து மொழிகளிலும், செய்திகள் மற்றும் இன்னும் பலவற்றையும் பார்க்கலாம். அதோடு, தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு முன்னதாகவே, புத்தம்புதிய நாடகங்களைக் கண்டு மகிழலாம்.

## படிநிலை 1 meWATCH செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


Apple App Store, Google Play Store அல்லது HUAWEI AppGallery-க்குச் சென்று, meWATCH செயலியைப் பதிவிறக்குங்கள் மற்றும் நிறுவுங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Get' என்பதைத் தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Install' என்பதைத் தட்டுங்கள்.


## படிநிலை 2 ஒரு meCONNECT கணக்கை இலவசமாக உருவாக்கி, உள்நுழையுங்கள்

மீடியாகார்ப்பின் அனைத்து மின்னிலக்கச் சேவைகளிலும், ஒரே meCONNECT கணக்கை நீங்கள் பயன்படுத்தலாம்.


மாறாக, உங்கள் Apple, Facebook அல்லது Google கணக்கைப் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.




3. உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி, ஒரு புதிய meCONNECT கணக்கை உருவாக்குங்கள்.




4. உங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதி விவரங்களைச் சேர்ப்பதன் வழி கணக்கை உங்களுக்கு மட்டுமே உரியதாக்குங்கள்.





5. உங்களுக்குப் பிடித்த சில நிகழ்ச்சி வகைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அதன் வழி, நீங்கள் விரும்பக்கூடிய நிகழ்ச்சிகளை நாங்கள் பரிந்துரை செய்வோம்!


## படிநிலை 3 பார்க்கத் தொடங்குங்கள்




6. இலவச நிகழ்ச்சிகள் அடங்கிய ஒரு மிகப் பெரிய தொகுப்பைக் கண்டறியுங்கள்.




7. உங்களுக்குப் பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள் அல்லது நிரலில் 'Live TV' என்பதைத் தட்டுவதன் வழி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழிகாட்டியைப் பாருங்கள்.




8. 'Continue Watching', நீங்கள் நிறுத்திய இடத்திலிருந்து நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்க்க, உங்களின் அனைத்துச் சாதனங்களிலும் வகைசெய்யும்.




9. 'My List' என்பதைத் தட்டுவதன் வழி, நீங்கள் பின்னர் பார்க்க விரும்பும் நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொள்ளலாம்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(மீடியாகார்ப் வழங்கும் தகவல்)*

- உங்கள் உள்நுழைவு விவரங்களை மற்றவர்களுக்கு **வெளியிட வேண்டாம்**, ஏனெனில் அது உங்கள் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கு அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு வழிவகுக்கும்.
- அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தடுக்க, **வலுவான கடவுச்சொல்லை** உங்கள் சாதனத்தில் பயன்படுத்துங்கள்.
- உங்கள் இணையக் கணக்கு ஊடுருவப்படும் அபாயத்தைக் குறைக்க, உங்கள் கடவுச்சொல்லை **அடிக்கடி மாற்றுங்கள்**.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## meLISTEN தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

meLISTEN' இலவச, தனிப்பட்ட மற்றும் இருவழி மின்னிலக்க ஒலி அனுபவத்தை உங்களுக்கு வழங்குகிறது. நீங்கள் எங்கு இருந்தாலும். வீட்டிலிருக்கும் உணர்வைக் கொடுக்கும் பழக்கமான ஒலிகளுடனும் உங்கள் அபிமான உள்ளூர் வானொலிப் படைப்பாளர்களுடனும் இணைந்திருங்கள்!

## படிநிலை 1 meLISTEN செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


Apple App Store, Google Play Store அல்லது HUAWEI AppGallery-க்குச் சென்று, meLISTEN செயலியைப் பதிவிறக்குங்கள் மற்றும் நிறுவுங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Get' என்பதைத் தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Install' என்பதைத் தட்டுங்கள்.


## படிநிலை 2 ஒரு meCONNECT கணக்கை இலவசமாக உருவாக்கி, உள்நுழையுங்கள்

மீடியாகார்ப்பின் அனைத்து மின்னிலக்கச் சேவைகளிலும், **ஒரே meCONNECT கணக்கை** நீங்கள் பயன்படுத்தலாம்.


மாறாக, உங்கள் Apple, Facebook அல்லது Google கணக்கைப் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.




3. உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி, ஒரு புதிய meCONNECT கணக்கை உருவாக்குங்கள்.





4. உங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதி விவரங்களைச் சேர்ப்பதன் வழி கணக்கை உங்களுக்கு மட்டுமே உரியதாக்குங்கள்.





5. உங்களுக்குப் பிடித்த வானொலி நிலையங்கள் மற்றும் வலையொலிகள் பற்றி எங்களோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள். உங்களுக்கான நிகழ்ச்சிகளை நாங்கள் பரிந்துரைப்போம்!


## படிநிலை 3 வானொலி நிலையங்கள் மற்றும் வலையொலிகளைக் கேட்கத் தொடங்குங்கள்




6. உங்களுக்குப் பிடித்த வானொலி நிலையங்களோடு இணைந்திருப்பதோடு, இலேசாகத் தட்டுவதன் வழி அவற்றை எளிதாகக் கேட்டு மகிழலாம்!




7. உங்கள் அபிமான படைப்பாளர்களின் பல்வேறு வலையொலிகளைக் கேட்பதோடு, பிரத்தியேக நிகழ்ச்சிகளையும் இந்தப் பக்கத்தில் கண்டறியுங்கள்!




8. பாடல் வாக்களிப்பு, வாக்கெடுப்புகள், சுவைத் தகவல்கள் என மேலும் பல வழிகளில் அவர்களுடன் இருவழித் தொடர்பில் இணைந்திருங்கள்!

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(மீடியாகார்ப் வழங்கும் தகவல்)*

- உங்கள் உள்நுழைவு விவரங்களை மற்றவர்களுக்கு **வெளியிட வேண்டாம்**, ஏனெனில் அது உங்கள் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கு அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு வழிவகுக்கும்.
- அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தடுக்க, **வலுவான கடவுச்சொல்லை** உங்கள் சாதனத்தில் பயன்படுத்துங்கள்.
- உங்கள் இணையக் கணக்கு ஊடுருவப்படும் அபாயத்தைக் குறைக்க, உங்கள் கடவுச்சொல்லை **அடிக்கடி மாற்றுங்கள்**.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## Facebook தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?


முகநூலில் குழு (Group) என்னும் சிறப்பம்சம் உள்ளது, இது குழுவினரின் தகவல் தொடர்புக்கும், மக்கள் தங்களது பொதுவான ஆர்வங்களைப் பகிர்ந்து கொள்ளவும் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கவும் அனுமதிக்கிறது.


## படிநிலை 1 Facebook செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**Apple App Store** அல்லது **Google Play Store** சென்று, **Facebook** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Get**' என்பதைத் தட்டுங்கள்.
2. Android பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 Facebook கட்டணமுறைக்குப் பதிவு செய்யுங்கள்








3. '**புதிய முகநூல் கணக்கை உருவாக்கு**' என்பதன் மீது தட்டவும். பின்னர் '**அடுத்து**' என்பதன் மீது தட்டவும்.
4. அதற்கான படிகளைப் பின்பற்றி உங்கள் பெயர், பிறந்த தேதி, பாலினம் மற்றும் கைப்பேசி எண்ணை உள்ளிடுங்கள்.
5. உங்கள் கணக்கிற்கான ஒரு கடவுச்சொல்லை உருவாக்கி '**அடுத்து**' என்பதன் மீது தட்டவும்.


* **நிபந்தனைகள் மற்றும் கொள்கைகளை படித்து** அந்த செயல்முறையை நிறைவு செய்திட "சைன்-அப்" (பதிவு) மீது தட்டவும்.

## படிநிலை 3 முகநூலில் நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் மற்றும் பதிவுகளுக்கு எதிர்வினை தாருங்கள்










6. உங்கள் நண்பருக்கான சுயவிவரத்தில் (புரோஃபைல்), '**நண்பரைச் சேர்க்கவும்**' என்பதன் மீது தட்டவும்.

**குறிப்பு:** உங்கள் நண்பர்களைச் சேர்ப்பதற்கு முன்பாக, உங்கள் முகநூல் சுயவிவரத்தை அமைத்துக் கொள்வதற்கு பரிந்துரையுங்கள்.

7. உங்கள் காலவரிசையில் (டைம்லைன்), ஒரு பதிவுக்கு நீங்கள் எதிர்வினை அளிப்பதற்கு "விருப்பு" பொத்தானைத் தட்டலாம். அழுத்தி பிடித்து அந்த பதிவுக்கு நீங்கள் விரும்பும் எதிர்வினையைத் தேர்வு செய்யுங்கள்.
8. மேலும் நீங்கள் அந்த பதிவுக்கான உங்கள் கருத்தை தட்டச்சு செய்வதற்கு, '**கருத்து**' என்பதன் மீதும் தட்டலாம்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: Facebook)*

- உங்கள் கணக்கிற்கு ஒரு வலிமையான கடவுச்சொல்லைத் தெரிவு செய்யுங்கள், குறைந்தபட்சம் ஆறு இலக்க எண்கள், எழுத்துகள் மற்றும் நிறுத்தற்குறிகள் (! மற்றும்& போன்றவை) கொண்ட கலவையாகலாம். மற்றும் உங்கள் கணக்கின் கூடுதல் பாதுகாப்புக்கு இரு-அம்ச உறுதிப்பாட்டு முறையை (2FA) அமைத்திடுங்கள்.
- உங்கள் கணக்கு பற்றி முகநூலில் இருந்து வரும் மின்னஞ்சல்கள் எப்பொழுதுமே fb.com, facebook.com அல்லது facebookmail.com ஆகியவற்றில் இருந்து மட்டுமே வருகின்றன. முக்கியமான செய்திகளுக்கு நீங்கள் எப்பொழுதும் www.facebook.com க்கு செல்லலாம் அல்லது உங்கள் முகநூல் செயலியை (app) திறந்து பார்க்கலாம்.
- உங்கள் கடவுச்சொல்/கடன் அட்டை தகவல்களை கேட்டுவரும் செய்திகளுக்கு பதில் அளிக்காதீர்கள் அல்லது பணம் கேட்டோ உங்கள் கணக்கை அழிக்கப் போவதாக அல்லது தடைசெய்யப் போவதாகப் பயமுறுத்தும் செய்திகளை நம்பாதீர்கள்.

# SG Digital

## Instagram தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

இன்ஸ்டாகிராமில் நீண்ட நேரம் இருக்கக்கூடிய விஷயங்களைப் பதிவு செய்வதற்கு நீங்கள் விரும்பாவிட்டால், 24 மணி நேரங்கள் மட்டுமே இருக்கக்கூடிய இன்ஸ்டாகிராம் கதைகளை நீங்கள் உருவாக்க முடியும்!

## படிநிலை 1 Instagram செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**Apple App Store** அல்லது **Google Play Store** சென்று, **Instagram** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Get**' என்பதைத் தட்டுங்கள்.
2. Android பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.


## படிநிலை 2 Instagram கட்டணமுறைக்குப் பதிவு செய்யுங்கள்





3. அந்த ஆப்பினை (app) தொடக்குங்கள். ஒரு கணக்கினை உருவாக்குவதற்கு 'சைன் அப்' மீது தட்டவும்.




4. உங்கள் '**தொலைபேசி எண்**' அல்லது '**மின்னஞ்சல் முகவரியை**' உள்ளிடுங்கள். '**அடுத்து**' என்பதன் மீது தட்டவும்.





5. உங்கள் கைப்பேசி எண்ணுக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ள '**உறுதிப்படுத்தும் குறியீட்டை**' உள்ளிடுங்கள். '**அடுத்து**' என்பதன் மீது தட்டவும்.





6. உங்கள் சுயவிவரத்தை உள்ளிட்டு அமைத்து முடிப்பதற்கு, திரை மீது தோன்றும் படிகளைப் பின்பற்றுங்கள்! உங்கள் பதிவு செயல்முறையை நிறைவு செய்திட '**சைன்-அப்**' மீது தட்டவும்!


## படிநிலை 3 இன்ஸ்டாகிராமில் நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள், பதிவுகளைச் சேர்த்து எதிர்வினை தாருங்கள்





7. நண்பர்களைத் தேடுவதற்கு, பூதக்கண்ணாடி சின்னத்தின் மீது தட்டவும்.




8. உங்கள் நண்பரின் சுயவிவரத்தை உள்ளிடுங்கள். பலரின் சுயவிவரங்கள் கொண்ட பட்டியல் ஒன்று தோன்றும். நீங்கள் தேடுகின்ற நபரின் பெயர் மீது தட்டவும்.




9. உங்கள் நண்பரின் இன்ஸ்டாகிராமைச் சேர்ப்பதற்கு, 'பின்தொடர்' என்பதன் மீது தட்டவும்.




- அந்த பதிவை விரும்புவதற்கு
- அந்த பதிவு குறித்து கருத்துரைப்பதற்கு
- அந்த பதிவை பகிர்வதற்கு

10. சின்னங்களின் மீது தட்டுவதன் மூலமாக, நீங்கள் பதிவுகளுக்கு எதிர்வினை அளிக்க முடியும்.

மேலும் நீங்கள் உங்கள் சொந்த பதிவை உருவாக்குவதற்கு நடுவில் உள்ள '+' சின்னத்தின் மீதும் தட்ட முடியும்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: Facebook)*

- உங்கள் கணக்கிற்கு ஒரு வலிமையான கடவுச்சொல்லைத் தெரிவு செய்யுங்கள், குறைந்தபட்சம் ஆறு இலக்க எண்கள், எழுத்துகள் மற்றும் நிறுத்தற்குறிகள் (! மற்றும் & போன்றவை) கொண்ட கலவையாகலாம். மற்றும் உங்கள் கணக்கின் கூடுதல் பாதுகாப்புக்கு இரு-அம்ச உறுதிப்பாட்டு முறையை (2FA) அமைத்திடுங்கள்.
- நீங்கள் அறிந்திராத மற்றும் நம்பாத யாரிடமும் உங்கள் கடவுச்சொல்லை ஒருபொழுதும் தராதீர்கள்.
- உங்கள் கணக்கு பற்றி இன்ஸ்டாகிராமில் / முகநூலில் இருந்து வரும் மின்னஞ்சல்கள் எப்பொழுதுமே @mail.instagram.com அல்லது @facebookmail.com ஆகியவற்றில் இருந்து மட்டுமே வரும்.

SG:DIGITAL   INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## TikTok தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?


டிக் டாக் என்பது குறுகிய-வடிவிலான அசையும் வீடியோவுக்கான ஒரு முன்னணி இலக்காகும். அதன் பணி படைப்புத்திறனுக்கு உத்வேகம் அளிப்பது மற்றும் மகிழ்ச்சி தருவது!

### படிநிலை 1 TikTok செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

Apple App Store அல்லது Google Play Store சென்று, TikTok பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.


1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Get' என்பதைத் தட்டுங்கள்.
2. Android பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Install' என்பதைத் தட்டுங்கள்.

### படிநிலை 2 டிக் டாக்கில் சேர பதிவு செய்து கொள்ளுங்கள்




3. விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள '**சம்மதித்து தொடரவும்**' என்பதன் மீது தட்டவும்.
4. உங்களுக்குப் பிடித்தமான தலைப்புகளைத் தேர்வு செய்து '**அடுத்து**' என்பதன் மீது தட்டவும்.
5. ஒரு கணக்கை உருவாக்குவதற்கு '**நான்**' என்ற சின்னத்தின் மீது தட்டி அதைத் தொடர்ந்து 'பதிவு' செய்யவும்.
6. உங்கள் கைப்பேசி, மின்னஞ்சல் அல்லது உங்களது நட்பு சமூக ஊடகக் கணக்குகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி பதிவு செய்யவும்.
7. கைப்பேசி அல்லது மின்னஞ்சலைத் தேர்வு செய்தால், தகவலை உள்ளிட்டு சரிபார்க்கும் குறியீட்டை அளித்திட தட்டவும்.

### படிநிலை 3 ஒரு காணொளியை பதிவு செய்யுங்கள் பதிவிடுங்கள்!




8. கேமரா செயல்முறையில் நுழைவதற்கு, பிளஸ்'+' பொத்தான் மீது தட்டவும்.
9. பதிவைத் தொடங்குவதற்கு **சிகப்பு பொத்தான்** மீது தட்டவும். பதிவை நிறுத்துவதற்கு மறுபடியும் தட்டவும்.
10. பதிவு செய்வதை முடித்துக் கொள்வதற்கு சரிக்குறி '✔' சின்னத்தின் மீது தட்டவும்.
11. உங்கள் காணொளியில் ஒலிகள், எழுத்துகள், விளைவுகள் மற்றும் ஒட்டிகளை சேருங்கள். செய்து முடித்ததும், '**அடுத்து**' என்பதன் மீது தட்டவும்.
12. விபரப் பெட்டியில் ஒரு தலைப்பைச் சேருங்கள். உங்கள் காணொளியை பதிவேற்றம் செய்வதற்கு 'போஸ்ட்' என்பதன் மீது தட்டவும்!

### இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: CSA Singapore / GoSafeOnline)*

- இணைய இணைப்பில் தனிப்பட்ட அல்லது நிதி சம்பந்தமான தகவல்களைப் பகிராதீர்கள்.
- எவருக்கும் அல்லது நீங்கள் அறிந்திராத இணையதளங்களுக்கு உங்கள் சரிபார்க்கும் குறியீடு அல்லது கடவுச்சொல்லைத் தெரிவிக்காதீர்கள்.
- தீம்பொருளுக்கு எதிராக உங்கள் உபகரணங்களைப் பாதுகாக்க உங்கள் மென்பொருளைத் தொடர்ந்து புதுபித்து வாருங்கள்.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## இணையத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான வழிமுறைகள்



## உங்களுக்குத் தெரியுமா?

நாம் எவ்வாறு வீட்டிற்குள் கொள்ளையர்கள் நுழையாதிருக்க கதவைப் பூட்டி வைக்கிறோமோ அதேபோல், இணையப் பரிவர்த்தனைகள் செய்யும்போது நமது சாதனங்களையும் தகவல்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் இணையத்தில் பாதுகாப்பாக இருக்க உதவும் குறிப்புகள் இவை.

### 1 ஆன்டிவைரஸ் (வைரஸ் தடுப்பு) மென்பொருளைப் பயன்படுத்தி, அதைத் தவறாமல் புதுப்பித்துக்கொண்டே இருங்கள்




ஆன்டிவைரஸ் மென்பொருள் ஆபத்தான வைரஸ்களை ஸ்கேன் செய்து, பாதுகாப்பற்ற இணையத்தளங்களைத் தடை செய்திடும். போலியான ஆன்டிவைரஸ் செயலிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அதிகாரபூர்வ ஆப் ஸ்டோர்களின் செயலிகளை மட்டுமே நிறுவுங்கள்.




மென்பொருளைப் புதுப்பித்துக்கொண்டே இருப்பது உங்கள் கணினியையும் சாதனங்களையும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து காத்திடும். தானாகவே புதுப்பித்துக்கொள்ளும் வசதி இருந்தால், அதைச் செயல்படுத்தி வைத்திருங்கள்.

### 2 உங்களது தனிப்பட்ட விவரங்களைக் கவனமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்





உங்களது தனிப்பட்ட விவரங்களை இணையத்தில் பகிர்ந்து கொள்ளும்போது, எப்போதுமே

a) உங்கள் விவரம் எதற்காகக் கேட்கப்படுகிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்; அதோடு

b) விவரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்பாக, அது அவசியம்தானா என யோசித்துப் பாருங்கள்.

உங்களிடம் கேட்கப்படும் விவரங்கள் ஏன் அவசியம் என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், உங்களது விவரங்களைக் கேட்ட அமைப்பிடம் விளக்கம் கேட்டு, உங்கள் விவரங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.


### 3 ஃபிஷ்ஷிங் அறிகுறிகளைக் கண்டுகொள்ளுங்கள்




ஃபிஷ்ஷிங் என்பது உங்களை ஏமாற்றி உங்களது தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களைத் தெரிவிக்க வைப்பதற்கு மோசடிக்காரர்கள் பயன்படுத்தும் ஓர் உத்தி. உங்களது புகுபதிவு விவரங்கள், வங்கிக் கணக்கு மற்றும் கடன்பற்று அட்டை எண்கள் போன்றவற்றை மோசடிக்காரர்கள் பெற முயல்வார்கள்.

போலி இணையத்தளங்கள், அரசாங்கம் அல்லது சேவை நிறுவனங்கள் அனுப்பியதுபோல பாசாங்கு செய்யும் மின்னஞ்சல்கள் அல்லது தொலைபேசி தகவல்கள் ஆகியவற்றிடம் எச்சரிக்கையாக இருங்கள். தவறாக வழிகாட்டும் தகவல்களைக் கவனித்திடுங்கள். கவர்ச்சியான வெகுமதிகள் கிடைக்கும் என ஆசைகாட்டி உங்களது இரகசிய விவரங்களை அவசரமாகவும் எதிர்பாராமலும் கேட்கும் கோரிக்கைகளிடம் கவனமாக இருங்கள். சரிபார்க்காத தொடர்புச் சுட்டிகளை (லிங்க்) அல்லது இணைப்புகளைத் திறக்கவோ பதிவிறக்கவோ கூடாது.

### 4 வலுவான மறைச்சொற்களைப் பயன்படுத்துவதோடு, 2FA-வையும் செயல்படுத்துங்கள்




உங்களால் ஞாபகம் வைத்திருக்கக்கூடிய “5 வெவ்வேறு சொற்களைப்” பயன்படுத்தி, நீளமான, தொடர்பில்லாத மறைச்சொற்களை உருவாக்குங்கள் (எ.கா. IhadKAYAtoastAT8am).

உங்களது மறைச்சொல்லையும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லையும் (OTP) யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடவேண்டாம்.

வசதி இருந்தால், கூடுதல் சரிபார்ப்புக்காக இரட்டை மறைச்சொல் முறையை (2FA) செயல்படுத்துங்கள்.

உங்கள் மறைச்சொல் வலிமையானதா என்பதைச் சரிபார்க்க https://go.gov.sg/csa-pwchecker இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது இந்த QR குறியீட்டை வருடுங்கள்.

### 5 பகிர்வதற்கு முன் சரிபார்க்கவும்




போலிச் செய்திகளின் பரவலைத் தடுத்திடுங்கள்.

- மூலம் எதுவென்று ஆராயுங்கள்
- தகவல் உண்மைதானா எனச் சரிபாருங்கள்
- உண்மைதானா என்பதை உறுதிப்படுத்துவதற்கான தளங்களைப் பயன்படுத்துங்கள். எ.கா. Factcheck.org மற்றும் www.gov.sg/Factually (சிங்கப்பூர் தொடர்பான செய்திகளுக்கு)

*நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு, ஊடக எழுத்தறிவு மன்றம் மற்றும் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையம்.*

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# குறிப்பு

SG:DIGITAL

MAKING CONNECTIONS THAT MATTER

# குறிப்பு

# நீங்கள் கற்றுக்கொள்ள எப்போதுமே புதிய மின்னிலக்கத் திறன் ஏதாவது இருக்கும்!

உங்களது மின்னிலக்கத் திறன் மேம்பாட்டை வாழ்நாள் கற்றல் பயணமாக்குங்கள்! இந்த வளங்களைப் பயன்படுத்தி உங்களது திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ளுங்கள்.



go.gov.sg/dp

## மின்னிலக்க இணையக் கூட்டரங்கு

ஒவ்வொரு வாரமும் உங்களுக்குப் புதியதொரு திறனைக் கற்றுத்தர இணையம்வழி பல்வேறு வகையான இருவழித்தொடர்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



go.gov.sg/cybersecuritytip

## இணையப்பாதுகாப்பு குறிப்புகள்

நீங்கள் இணையத்தைப் பயன்படுத்த கற்றுக்கொண்டு விட்டீர்கள். இனி, இணையத்தில் எப்படி பாதுகாப்பாக இருப்பது என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.



go.gov.sg/SeniorsLJ

## கற்றல் பயணங்கள்

உங்களது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த உதவும் பற்பல மின்னிலக்கச் செயலிகளைப் பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்.



go.gov.sg/LearnDigital

## கற்றல் திட்டங்கள்

அத்தியாவசிய மின்னிலக்கத் திறன்களை வகுப்பறையில் கற்பிக்கும் சிறப்புத் திட்டங்கள் தீவெங்கிலும் நடத்தப்படுகின்றன! மேல்விவரம் அறிய குறியீட்டை வருடுங்கள்.